மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

ஹிகாயத் பாண்டவ லிமா, மகாபாரதம், வில்லிபாரதம் ஆகிய பதிப்புகளில் அபிமன்யுவின் திருமணம்: ஓர் ஒப்பீட்டு இலக்கிய ஆய்வு

Abhimanyu's Marriage in the Hikayat Pandava Lima, Mahabharata and Villibharatam: A Comparative Literary Study

Samikkanu Jabamoney Ishak Samuel / சாமிக்கண்ணு ஜெபமணி ஈசாக்கு சாமுவேல்[1]

[1]Associate Professor, Quest International University, Ipoh

Date of Submission: 15-05-2026
Date of Acceptance: 30-05-2026
Date of Publication: 30-06-2026
Corresponding Author's Email:
samikkanu.jabamoney@qiu.edu.my

ஆய்வுச் சாரம்

இந்திய இதிகாசமான மகாபாரதம் தென்கிழக்காசிய இலக்கிய மரபுகளில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மலாய் இலக்கியத்தில் ஹிகாயத் பாண்டவ லிமா என்றழைக்கப்படும் இந்தத் தழுவல் மகாபாரதக் கதை, மலாய்க் கலாசாரத்திற்கே உரிய வகையில் மறுவடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக் கட்டுரை, ஹிகாயத் பாண்டவ லிமா, மகாபாரதம், வில்லிபாரதம் ஆகிய மூன்று இலக்கிய மரபுகளிலும் இடம்பெற்றுள்ள அபிமன்யுவின் திருமண நிகழ்வுகளை ஒப்பீட்டு முறையில் ஆராய்கிறது. ஹிகாயத் பாண்டவ லிமாவில் அபிமன்யு, தேவி சித்தி சுந்தரி, தேவி உத்தாரி ஆகிய இரு பெண்களைத் திருமணம் செய்கிறார். தேவி சித்தி சுந்தரியுடனான முதல் திருமணம் முழுவதுமாக ஹிகாயத் பாண்டவ லிமாவுக்கு மட்டுமே உரித்தான புதிய கதைமாந்தர்களையும் நிகழ்வுகளையும் கொண்டுள்ளது. தேவி உத்தாரியுடனான இரண்டாவது திருமணம் மகாபாரதம், வில்லிபாரதம் ஆகிய பதிப்புகளுடன் அடிப்படையில் ஒத்திருப்பினும், ஹிகாயத் பாண்டவ லிமாவில் குறிப்பிடத்தக்க தழுவல்களும் சேர்ப்புகளும் காணப்படுகின்றன. 27 ஒப்பீட்டுப் நிகழ்வுகளில் 23 நிகழ்வுகள் ஹிகாயத் பாண்டவ லிமாவுக்கு மட்டுமே தனித்துவமானவையாக உள்ளன. இது மலாய் இலக்கிய படைப்பாளர் மகாபாரதக் கதையை எவ்வாறு உள்ளூர்மயமாக்கி, புதிய கதை அமைப்புகளையும் கலாசார பின்னணிகளையும் இணைத்துள்ளார் என்பதை வெளிப்படுத்துகிறது. காதல், தவம், உருவமாற்றம், நகைச்சுவை, மந்திரசக்தி என பன்முகக் கூறுகளை இணைத்து, ஹிகாயத் பாண்டவ லிமா ஒரு தனித்துவமான இலக்கியப் படைப்பாக உருவெடுத்துள்ளது.

கருச்சொற்கள்: ஹிகாயத் பாண்டவ லிமா, மகாபாரதம், வில்லிபாரதம், அபிமன்யு, தேவி சித்தி சுந்தரி, தேவி உத்தாரி

Abstract

The Indian epic Mahabharata has had a profound impact on Southeast Asian literary traditions. In Malay literature, this adaptation, known as the Hikayat Pandava Lima, has been reimagined in a manner unique to Malay culture. This research article employs a comparative method to examine the marriage events of Abhimanyu as depicted in three literary traditions: the Hikayat Pandava Lima, the Mahabharata, and the Villibharatam. In the Hikayat Pandava Lima, Abhimanyu marries two women, Devi Siti Sundari and Devi Uttari. The first marriage, with Devi Siti Sundari, features entirely new characters and events that are exclusive to the Hikayat Pandava Lima. The second marriage, with Devi Uttari, is fundamentally consistent with the versions found in the Mahabharata and Villibharatam; however, the Hikayat Pandava Lima contains significant adaptations and additions. Among the 27 comparative events, 23 are unique solely to the Hikayat Pandava Lima. This reveals how the Malay literary author localized the Mahabharata narrative, incorporating new plot structures and cultural contexts. By integrating multifaceted elements such as romance, penance, transformation, comedy, and magical powers, the Hikayat Pandava Lima emerges as a distinctive literary work.

Keywords: Hikayat Pandava Lima, Mahabharata, Villibharatam, Abhimanyu, Devi Siti Sundari, Devi Uttari

அறிமுகம்

உலக இலக்கிய வரலாற்றில் மிகப் பெரிய இதிகாசங்களில் ஒன்றான மகாபாரதம், இந்தியத் துணைக்கண்டத்தை மட்டுமின்றி, தென்கிழக்காசியா, இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து, கம்போடியா உள்ளிட்ட நாடுகளின் இலக்கிய மரபுகளில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த இதிகாசம் ஒவ்வொரு நாட்டின் கலாசாரத்திற்கும் ஏற்றவாறு தழுவல்களைப் பெற்று, புதிய உள்ளூர் மரபுகளை உருவாக்கியுள்ளது. மலாய் இலக்கியத்தில் இந்தத் தழுவல்களில் மிக முக்கியமானது ஹிகாயத் பாண்டவ லிமா (Hikayat Pandawa Lima) ஆகும் (Kumar, S. K. 2025).

'ஹிகாயத்' என்பது மலாய் மொழியில் காவியம் அல்லது கதை எனப் பொருள்படும். 'பாண்டவ லிமா' என்பது 'ஐந்து பாண்டவர்கள்' எனப் பொருள்படும். இந்த நூல் மகாபாரதத்தின் முக்கிய கதை அமைப்பை மலாய் மொழியிலும், மலாய்க் கலாசாரப் பின்னணியிலும் மறுவடிவமைத்துக் காட்டுகிறது. இந்த ஆய்வு ஹிகாயத் பாண்டவ லிமாவில் இடம்பெற்றுள்ள அபிமன்யு எனும் கதைமாந்தனின் திருமண நிகழ்வுகளை, வடமொழி மகாபாரதம் மற்றும் தமிழ் வில்லிபாரதம் ஆகியவற்றுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

அபிமன்யு (Sang Bimanyu) பாண்டவர்களில் மூன்றாமான அர்ஜுனன் (Sang Rajuna) சுபத்திரை (Dewi Subadra) தம்பதிகளின் மகனாவான். அபிமன்யுவின் திருமணம் மூன்று இலக்கிய மரபுகளிலும் வெவ்வேறு விதங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளன. ஹிகாயத் பாண்டவ லிமாவில் அபிமன்யு, இரண்டு திருமணங்களை மேற்கொள்கிறான். முதலாவது திருமணம் பலராமனின் மகள் தேவி சித்தி சுந்தரியுடனும் (Dewi Siti Sundari), இரண்டாவது திருமணம் விராட மன்னனின் மகள் தேவி உத்தாரியுடனும் (Dewi Uttari) நடைபெருகின்றது (Khalid Hussain (Ed.), 1992). மகாபாரதத்திலும் வில்லிபாரதத்திலும் அபிமன்யு விராட நாட்டு மன்னனின் மகள் உத்தரையுடன் மட்டுமே திருமணம் செய்துகொள்வதாகச் சித்தரிக்கப்படுகின்றது (Vyasar Aruliya Mahabharata, 1989). இந்த வேறுபாடுகள் ஒவ்வொரு இலக்கிய மரபின் தனித்துவமான கதைசொல்லல் நுட்பங்களையும், கலாசார மதிப்பீடுகளையும், கருத்தியல் நிலைப்பாடுகளையும் பிரதிபலிக்கின்றன.

இந்த ஆய்வு, பின்வரும் ஆராய்ச்சி கேள்விகளுக்கு விடை காண முயல்கிறது.

1. ஹிகாயத் பாண்டவ லிமா, மகாபாரதம், வில்லிபாரதம் ஆகிய பதிப்புகளில் அபிமன்யு திருமணம் தொடர்பான கதை அமைப்பு எவ்வாறு ஒப்பிடப்படுகின்றன?
2. ஹிகாயத் பாண்டவ லிமாவில் காணப்படும் தனித்துவமான சேர்ப்புகள், தழுவல்கள் மற்றும் குறைப்புகள் யாவை?

முந்தைய ஆய்வுகள்

சமஸ்கிருதம், தமிழ், மலாய் பதிப்புகளில் மகாபாரதம் குறித்த ஆய்வுகள், இந்தோனேசிய, மலாய், ஆங்கில, தமிழ்மொழிகளில் நூல்கள், ஆய்வேடுகள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொடக்கக் கால ஆய்வுகள், இந்தியக் காப்பிய மரபுகள் தென்கிழக்காசியாவிற்குப் பரவியதைத் தடமறிவதிலேயே கவனம் செலுத்தின. Choo Ming Ding, Willem van der Molen ஆகிய இருவரும், ஜாவா மற்றும் மலாய் இலக்கியங்களில் இராமாயணம் மற்றும் மகாபாரதத்தின் இருப்பை ஆய்வு செய்து, உள்ளூர் இலக்கிய மரபுகளுக்குள் இந்தியக் காப்பியங்கள் தழுவி அமைக்கப்பட்டதை எடுத்துரைத்தனர் (Ding & Van der Molen, 2018). இதேபோல், Coedès (1968), Sarkar (1970) ஆகிய இருவரும், இந்தியக் கலாச்சாரத் தாக்கத்தின் பரந்த செயல்முறையையும், தென்கிழக்காசிய நாகரிகங்களை வடிவமைப்பதில் அதன் பங்கையும், மகாபாரதக் கதைகள் வட்டார இலக்கியக் கலாச்சாரங்களில் இணைக்கப்பட்டதையும் உள்ளடக்கியதாக ஆய்வு செய்தனர்.

அதன்பிறகான ஆய்வுகள், மலாய் இலக்கியத்தின் வளர்ச்சி மற்றும் அதனுள் மகாபாரதக் கூறுகள் ஒருங்கிணைக்கப்பட்டது ஆகியவற்றில் கவனம் செலுத்தியது. Ismail Hamid (1985, 1987) அவர்கள், மகாபாரதமும் ஜாவா இலக்கிய மரபுகளும் செவ்வியல் மலாய் இலக்கியத்தின் மீது செலுத்திய குறிப்பிடத்தக்கத் தாக்கத்தை நிறுவிக் காட்டினர். இதேவேளை, Khalid Hussain (1990) அவர்கள், 'ஹிகாயத் பாண்டவ லீமா'வைப் பகுப்பாய்வு செய்து, ஜாவா மகாபாரதமே பாண்டவர் கதையின் மலாய் மறுவுருவங்களை வடிவமைப்பதில் மையப் பங்கு வகித்தது என வாதிட்டனர். Singaravelu Sachithanandam (1970, 2004), Rajantheran Muniyandi (2017) ஆகியோரின் ஆய்வுகள், இந்த இலக்கிய வளர்ச்சிகளைத் தென்கிழக்காசியாவில் இந்தியக் கலாச்சார மற்றும் சமயத் தாக்கத்தின் பரந்த கட்டமைப்பிற்குள் மேலும் நிலைநிறுத்தின.

மொழி மரபுகளுக்கிடையே மகாபாரதத்தின் ஒப்பீட்டு ஆய்வுகள் இன்னும் வரையறுக்கப்பட்ட நிலையிலேயே உள்ளன. இவற்றில் மிக முக்கியமான பங்களிப்புகளில் ஒன்று Samikkanu Jabamoney Ishak Samuel (2002) அவர்களுடையதாகும்; அவரது முதுகலைப் பட்ட ஆய்வேடு, 'ஹிகாயத் பாண்டவ லீமா'வின் மலாய், சமஸ்கிருதம், தமிழ் ஆகிய பதிப்புகளை ஒப்பிட்டு, மூன்று மரபுகளுக்கிடையிலான முக்கியமான ஒற்றுமைகளையும் வேறுபாடுகளையும் கண்டறிந்தது. அவரது முனைவர்ப் பட்ட ஆய்வு (Samikkanu Jabamoney Ishak Samuel, 2008) மற்றும் அதனைத் தொடர்ந்த மலாய் இலக்கியத்தில் மகாபாரதம் என்னும் ஆய்வுக் கட்டுரை (Samikkanu Jabamoney Ishak Samuel, 2019) ஆகியவை, மலேசியாவில் தமிழ் மற்றும் மலாய் இலக்கியப் படைப்புகளில் இராமாயணம் மற்றும் மகாபாரதத்தின் தாக்கத்தை மேலும் ஆய்வு செய்தன. Harry Aveling (2018) அவர்களும், ஜாவா, மலாய், நவீன இந்தோனேசிய நூல்களில் அபிமன்யுவின் இறப்புச் சித்தரிப்பைப் பகுப்பாய்வு செய்து ஒப்பீட்டு அணுகுமுறையை மேற்கொண்டார்.

இந்த முக்கியமான பங்களிப்புகள் இருந்தபோதிலும், ஏற்கனவே உள்ள ஆய்வுகள் பெரும்பாலும் இந்திய, மலாய் அல்லது ஜாவா, மலாய் ஆகிய இலக்கிய ஒப்பீடுகளிலேயே கவனம் செலுத்தியுள்ளது. Brakel (1980) அவர்கள், மலாய், ஜாவா இலக்கியங்களில் இந்தியக் காப்பியங்களை ஒப்பிட்டுள்ளார், ஆனால், தமிழ் மரபை உள்ளடக்கவில்லை. இதன் விளைவாக, மகாபாரதத்தின் சமஸ்கிருதம், தமிழ், மலாய் பதிப்புகளை உள்ளடக்கிய விரிவான ஒப்பீட்டுப் பகுப்பாய்வுகள் அரிதாகவே உள்ளன. இந்த இடைவெளி, தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா முழுவதும் மகாபாரதத்தின் தழுவல், பரப்புகை மற்றும் உள்ளூர்மயமாக்கல் ஆகிய செயல்முறைகளைச் சிறப்பாகப் புரிந்துகொள்ளும் பொருட்டு, மூன்று மரபுகளையும் ஒன்றாக ஆய்வு செய்யும் மேலதிக ஆராய்ச்சியின் அவசியத்தை எடுத்துக்காட்டுகிறது (Brakel, 1980; Samikkanu Jabamoney Ishak Samuel, 2002; Harry Aveling, 2018).

ஆய்வு அணுகுமுறை

இந்த ஆய்வுப் பண்புசார் ஒப்பீட்டு இலக்கிய முறையைப் பின்பற்றி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மூன்று இலக்கிய மூலங்களிலும் அபிமன்யுவின் திருமணம் தொடர்பான கதைப் பகுதிகள் முதன்மை ஆதாரங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மூலத்திலும் உள்ள கதைக் கட்டமைப்பு, கதைமாந்தர்கள், நிகழ்வுகளின் வரிசை, கருப்பொருள்கள், உரையாடல்கள், கலாசாரக் குறியீடுகள் ஆகியவை விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

ஒப்பீட்டிற்கான அடிப்படை கட்டமைப்பு நான்கு முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன

- ஒற்றுமைகள் (Similarities): மூன்று மூலங்களிலும் பொதுவாகக் காணப்படும் நிகழ்வுகள்.
- தழுவல்கள் (Adaptations): ஹிகாயத் பாண்டவ லிமா பதிப்பில் மகாபாரதம், வில்லிபாரதம் பதிப்பிலிருந்து தாக்கம் பெற்று மாற்றியமைக்கப்பட்ட நிகழ்வுகள்.
- சேர்ப்புகள் (Additions): ஹிகாயத் பாண்டவ லிமா பதிப்பில் மட்டுமே காணப்படும் புதிய நிகழ்வுகள், கதைமாந்தர்கள் மற்றும் உத்திகள்.
- குறைப்புகள் (Omissions): ஹிகாயத் பாண்டவ லிமா பதிப்பில் இல்லாத நிகழ்வுகள்.

மொத்தம் 27 முக்கிய கதை நிகழ்வுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

ஹிகாயத் பாண்டவ லிமா, மகாபாரதம், வில்லிபாரதம் ஆகிய பதிப்புகளில் இடம் பெற்றுள்ள அபிமன்யுவின் திருமண நிகழ்வுகள்

ஹிகாயத் பாண்டவ லிமா

அபிமன்யுவின் தேவி சித்தி சுந்தரியுடனான முதல் திருமணம்

ஹிகாயத் பாண்டவ லிமாவின் கதைப் பின்னல் மிகவும் சிக்கலானதும், வியத்தகு நிகழ்வுகள் நிறைந்ததுமான ஒரு காதல் கதையாக அமைகிறது. பாண்டவர்கள் ஆர்த்த லேகா (Arda Leka) எனும் நாகத்தால் விழுங்கப்பட்ட மறைவுக்குப் பின்னர், பேதாரா கிருஷ்ணா (கிருஷ்ணர்) தேவி சுபத்ரா (சுபத்திரை) மற்றும் அவரது மகன் சாங் பிமன்யுவைத் (அபிமன்யு) துருவத பூர்வா (Druwata Purwa) நகருக்கு அழைத்துச் செல்கிறார். அங்கு சாங் பிமன்யு பேதாரா கிருஷ்ணாவின் அழகிய மகள் தேவி சித்தி சுந்தரியின் (Dewi Siti Sundari) மீது காதல் கொள்கிறான் (Khalid Hussain (Ed.), 1992).

இருப்பினும், இந்தக் காதலுக்கு ஒரு பெரிய தடை ஏற்படுகிறது. ஏற்கனவே, மகாராஜா பாலதேவா (பலராமன்) தேவி சித்தி சுந்தரியை வளர்ப்பு மகளாக ஏற்று, அவளை மகாராஜா துரியோதனனின் மகனுமான இலட்சுமண குமாராவிற்கு (Laksamana Kumara) மணமுடித்து வைப்பதாக வாக்களித்திருந்தார். தேவி சித்தி

சுந்தரி இந்தத் திருமண ஏற்பாடு குறித்து, தனது தோழி சி தர்பணா (Si Darpana) மூலம் சாங் பிமன்யுவிற்குத் தெரிவிக்கிறாள். சாங் பிமன்யு தனது நண்பன் ஜெருடே (Jerudeh) உடன் இணைந்து தேவி சித்தி சுந்தரியைச் சந்திக்கச் செல்கிறான். இதனை அறிந்த மகாராஜா பாலதேவா, சாங் பிமன்யுவைக் கொல்லப் போவதாக மிரட்டுகிறார். இதனால் சாங் பிமன்யுவும் ஜெருடேயும் காட்டிற்குத் தப்பி ஓடுகின்றனர் (Khalid Hussain (Ed.), 1992).

காட்டில், சாங் பிமன்யு ஒரு காலில் நின்று, கைகளைக் கட்டிப் பிடித்து கடுந்தவம் புரிகிறான். இந்தச் சமயத்தில், கால புத்திரா (Kala Putra) என்ற இராட்சசன், பேதாரா துர்க்காவிற்குப் (Betara Durga) பலியிடும் பொருட்டு உயிரினங்களைத் தேடிச் செல்லும் போது, சாங் பிமன்யுவையும் ஜெருடேயையும் பறக்கவிட்டுப் பேதாரா துர்க்காவின் இடத்திற்குக் கொண்டு செல்கிறான். தன்னால் எதுவும் செய்ய முடியாது என்பதை உணர்ந்த சாங் பிமன்யு, பேதாரா துர்க்காவை வணங்கித் தன்னைக் காப்பாற்றுமாறு வேண்டுகிறான். பேதாரா துர்க்கா இரக்கம் கொண்டு, அவர்களைச் சாங் பிமன்யுவின் உறவினனான மகாராஜா கடோத்கஜா (Gatotkaca) என்பவனிடம் அனுப்பி வைக்கிறாள் (Khalid Hussain (Ed.), 1992).

மகாராஜா கடோத்கஜா, சாங் பிமன்யுவிற்குத் தேவி சித்தி சுந்தரியை மணம்முடித்து தருவதாக வாக்களிக்கிறான். தேவி சித்தி சுந்தரியின் நிலைமையை அறிந்து கொள்ள அவன் தனது தூதன் வாலதாத்தாவை (Waladata) அனுப்புகிறான். திரும்பி வந்த வாலதாத்தா, தேவி சித்தி சுந்தரி சாங் பிமன்யுவை நினைத்து நாள்தோறும் அழுது வருந்துவதாகவும், இலட்சுமண குமாரா தன்னை அணுகினால் தற்கொலை செய்துகொள்ள போவதாகவும் கூறியதாக தெரிவிக்கிறான். உடனே, கடோத்கஜா தனது படையைத் துருவத பூர்வாவின் மீது படையெடுக்க உத்தரவிடுகிறான். படை அர்கா பஜ்ரா (Arga Bajra) மலைக்குப் பின்னால் தங்குமாறு கட்டளையிடப்படுகிறது. அதே சமயம் கடோத்கஜா, சாங் பிமன்யு, ஜெருடே மற்றும் சாங் செந்தக சுதர்சா (Sang Centaka Sudarsa) ஆகியோர் மகாராஜா பாலதேவாவின் அரண்மனைக்குச் செல்கின்றனர் (Khalid Hussain (Ed.), 1992).

திட்டமிட்டப்படி, சாங் பிமன்யுவும் ஜெருடேயும் தேவி சித்தி சுந்தரியையும் சி தர்பணாவையும் அர்கா பஜ்ரா மலையிலுள்ள பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்கின்றனர். கடோத்கஜாவும் சாங் செந்தக சுதர்சாவும் தேவி சித்தி சுந்தரி மற்றும் சி தர்பணாவின் உருவத்தை மாற்றிக் கொண்டு, இலட்சுமண குமாராவைக் கொல்லும் நோக்கத்துடன் காத்திருக்கின்றனர். இந்தச் சதியினை அறிந்த இராட்சசன் சாங் ஜதந்தா (Sang Jadanta), இதனை இலட்சுமண குமாராவிடம் தெரிவிக்கிறான். இலட்சுமண குமாராவின் அனுமதியுடன், சாங் ஜதந்தா இலட்சுமண குமாராவின் உருவத்தை மாற்றிக்கொண்டு தேவி சித்தி சுந்தரியின் அரண்மனைக்குள் நுழைகிறான். அங்கு, கடோத்கஜாவும் சாங் ஜதந்தாவும் தங்கள் உண்மையான உருவத்திற்கு மாறி கடும் போரை மேற்கொள்கின்றனர். இறுதியில் கடோத்கஜா சாங் ஜதந்தாவைக் கொன்று, அவனது தலையைத் துண்டித்து மகாராஜா துரியோதனனின் பக்கம் வீசி எறிகிறான் (Khalid Hussain (Ed.), 1992).

இதனால் கோபமடைந்த மகாராஜா துரியோதனன், தனது படையைக் கடோத்கஜாவின் தலைநகரான தாராவதி புராவை (Darawati Pura) அழிக்க அனுப்புகிறான். கௌரவர்களுக்கும் கடோத்கஜாவின் படைகளுக்கும் இடையில் கடும் போர் மூள்கிறது. பல கௌரவ வீரர்கள் கொல்லப்படுகின்றனர். யாராலும் கடோத்கஜாவை வெல்ல முடியாத நிலையில், மகாராஜா பாலதேவா (Maharaja Baladewa) நேரடியாகப் போர்க்களத்தில் இறங்குகிறார். அவரும் கடோத்கஜாவும் நெருப்பின் உருவத்தில் மாறி போரிடுகின்றனர். இந்த நெருப்பின் வெப்பத்தைத் தேவர்களாலும் தாங்க முடியாத நிலை ஏற்படுகிறது. அப்போது பேதாரா இந்திரா (Betara Indera), பேகவான் நாரதரை (Begawan Narada) அனுப்பி, தவத்தில் இருந்த பேதாரா கிருஷ்ணாவிற்கு இந்தச் செய்தியைத் தெரிவிக்கிறார். உடனே, பேதாரா கிருஷ்ணா வந்து இரு தரப்பையும் சமாதானப்படுத்துகிறார். மேலும், தேவி சித்தி சுந்தரியைச் சாங் பிமன்யுவிற்கு மணமுடித்து வைப்பதாக ஒப்புக்கொள்கிறார். இவ்வாறு முதல் திருமணம் நிறைவேறுகிறது (Khalid Hussain (Ed.), 1992).

அபிமன்யுவின் தேவி உத்தாரியுடனான இரண்டாவது திருமணம்

சாங் பிமன்யுவிற்கும் தேவி சித்தி சுந்தரிக்கும் திருமணம் நடந்த பின்னர், பேதாரா இந்திராவின் கட்டளைப்படி பேகவான் நாரதர் மகாராஜா தர்மவங்கசாவை (தருமபுத்திரர்) அணுகி, பாண்டவர்களை இந்திர பாஸ்தாவிற்குத் (Indera Pasta) திரும்ப அழைக்கிறார். மகாராஜா வுர்கதேவாவின் அனுமதியுடன், பாண்டவர்கள் மெர்சுனேகாரா (Mercunegara) நகரிலிருந்து வெளியேறி, தங்கள் பழைய உடைகளை அணிந்து இந்திர பாஸ்தாவிற்குப் புறப்படுகின்றனர். அவர்களை மந்திரிகள் மற்றும் தளபதிகள் வரவேற்கின்றனர் (Khalid Hussain (Ed.), 1992).

இதற்கிடையில், சாங் பிமன்யு தேவி உத்தாரியின் (Dewi Utari) அழகைக் கண்டு அவள் மீது காதல் கொள்கிறான். அவளை மணக்காவிட்டால் வனவாசம் செல்வதாக மிரட்டுகிறான். மகாராஜா தர்மவங்கசா இதனைப் பற்றி ஆலோசிக்கும் போது, பேதாரா கிருஷ்ணா சாங் பிமன்யுவின் கோரிக்கைக்கு ஒப்புக்கொள்கிறார். ஆனால், மகாராஜா மங்கஸ்பதி (விராட மன்னன்), தனது மகள் தேவி உத்தாரி ஏற்கனவே சாங் ராஜுனாவிற்கு (அர்ஜுனன்) நிச்சயிக்கப்பட்டுவிட்டதாகக் கூறுகிறார். இருப்பினும், தேவி உத்தாரி சாங் பிமன்யுவுடன் வயதிலும் தகுதியிலும் பொருத்தமானவள் என்று கூறி சாங் ராஜுனாவும் இந்தத் திருமணத்திற்கு உடன்படுகிறார். இவ்வாறு சாங் பிமன்யுவிற்கும் தேவி உத்தாரிக்கும் திருமணம் நடைபெறுகிறது (Khalid Hussain (Ed.), 1992).

இந்த இரண்டாவது திருமணத்தை அறிந்த தேவி சித்தி சுந்தரி பெரிதும் கோபம் அடைந்து, தனது தந்தை பேதாரா கிருஷ்ணாவின் இல்லத்திற்குத் திரும்பிச் சென்றுவிடுகிறாள். சாங் பிமன்யு பலமுறை அழைத்தும் அவள் திரும்பி வர மறுக்கிறாள். சாங் பிமன்யு இந்த விஷயத்தை சாங் ராஜுனாவிடம் கூற, சாங் ராஜுனா ஒரு மந்திரத்தைக் கற்றுக்கொடுத்து, அதனைத் தேவி சித்தி சுந்தரியின் முன்னால் படிக்குமாறு சாங் பிமன்யுவிடம் கூறுகிறான். சாங் பிமன்யு அந்த மந்திரத்தைப் படிக்கவும், தேவி சித்தி சுந்தரி உடனடியாக மனம்மாறி, சாங் பிமன்யுவுடன் திரும்பிச் சென்று தேவி உத்தாரியுடன் நட்புடனும் அன்புடனும் பழகுகிறாள். இவ்வாறு சாங் பிமன்யுவின் இரு திருமணங்களும் மகிழ்ச்சியுடன் நிறைவுறுகின்றன (Khalid Hussain (Ed.), 1992).

மகாபாரத்தில் அபிமன்யுவின் திருமணம்

மகாபாரதத்தின் விராட பருவத்தில், பாண்டவர்கள் தங்கள் அஞ்ஞானவாசத்தை வெற்றிகரமாக நிறைவு செய்த பின்னர், விராட மன்னன் மிகுந்த மகிழ்ச்சியடைகிறான். தனது நாட்டில் மறைந்திருந்தவர்கள் பாண்டவர்களும் திரௌபதியும்தான் என்பதை அறிந்ததும், தான் செய்த தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறான். மேலும், தனது முழு ஆட்சியையும் பாண்டவர்களுக்கு வழங்க முன்வருகிறான். இவற்றுடன், தனது அழகிய மகள் உத்தரையை அர்ஜுனனுக்கு மணமுடித்துத் தரவும் ஆவலுடன் முன்வருகிறார் (Vyasar Aruliya Mahabharata, 1989).

ஆனால், தான் உத்தரைக்கு நடன ஆசிரியனாக இருந்ததால், ஒரு குரு தனது சீடனை மணப்பது முறையல்ல, எனவே, தான் உத்தரையை மணக்க முடியாது என்று அர்ஜுனன் மறுக்கிறான். எனினும், தன் மகன் அபிமன்யு அவளுக்கு ஏற்றவனும், இளையவனுமானவன். அவனுக்கு உத்தரையை மணமுடித்து வைக்க முழுமனதுடன் ஒப்புக்கொள்கிறேன்" என்று கூறுகிறான். விராட மன்னனும் இந்த முடிவிற்கு மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொள்கிறான் (Vyasar Aruliya Mahabharata, 1989).

இதனைத் தொடர்ந்து, பாண்டவர்கள் விராட நகரத்திலிருந்து உபப்லவ்ய (Upaplavya) என்ற நகரத்திற்குக் குடிபெயர்கின்றனர். அங்குக் கிருஷ்ணர் தனது சகோதரி சுபத்திரை மற்றும் மகன் அபிமன்யுவுடன் பாண்டவர்களைச் சந்திக்க வருகிறார். அத்துடன், காசி மன்னனும், திருபத மன்னனும் தங்கள் படைகளுடன் வந்து பாண்டவர்களுக்குத் தங்கள் ஆதரவைத் தெரிவிக்கின்றனர். பின்னர் அபிமன்யுவிற்கும் உத்தரைக்கும் இடையில் மிகவும் ஆடம்பரமான திருமண விழா நடத்தப்படுகிறது. இந்தத் திருமணம் இரு குடும்பங்களுக்கும் இடையிலான நட்பை உறுதிப்படுத்தும் ஒரு அரசியல் நிகழ்வாகவும் அமைகிறது (Vyasar Aruliya Mahabharata, 1989).

வில்லிபாரதத்தில் அபிமன்யுவின் திருமணம்

தமிழ் மொழியில் இயற்றப்பட்ட வில்லிபாரதத்தில் அபிமன்யுவிற்கும் உத்தரைக்கும் இடையிலான திருமண நிகழ்வு மகாபாரதத்துடன் கிட்டத்தட்ட ஒத்ததாகவே அமைகிறது. இருப்பினும், ஒரு சிறிய வேறுபாடு காணப்படுகிறது. மகாபாரதத்தில் விராட மன்னனே தனது மகளை அர்ஜுனனுக்கு மணமுடிக்க முன்வருகிறான். ஆனால், வில்லிபாரதத்தில் விராட மன்னனின் மகனும் இளவரசனுமான உத்தரன்தான் முதன்மையாக இந்த முன்மொழிவை கூறுகிறான் (Villiputturar, 1990).

மேலும், வில்லிபாரதத்தில் திருமண நிகழ்வுகள் தொடங்கும் முன், உத்தரன் பாண்டவர்களுக்குத் தனது ஆட்சியையும், செல்வத்தையும் அர்ப்பணிப்பதாக வாக்களிக்கிறான். மேலும், பாண்டவர்களின் கட்டளைகளை எப்போதும் பின்பற்றுவதாகவும் உறுதியளிக்கிறான். பின்னர், அவன் தனது சகோதரி உத்தரையை அர்ஜுனனுக்கு மணமுடித்து வைக்க விரும்புவதாகக் கூறுகிறான். ஆனால் மகாபாரதத்தில் உள்ளதைப் போலவே, அர்ச்சுனன் இதனை மறுத்து, தனது மகன் அபிமன்யுவை உத்தரைக்கு மணமுடித்து வைப்பதாக ஒப்புக்கொள்கிறான். இறுதியில், அபிமன்யுவிற்கும் உத்தரைக்கும் திருமணம் மிகச் சிறப்பாக

நடைபெறுகிறது (Villiputturar, 1990).

ஹிகாயத் பாண்டவ லிமா, மகாபாரதம், வில்லிபாரதம் ஆகிய பதிப்புகளின் ஒப்பீட்டு ஆய்வு முடிவுகள்

ஒற்றுமைகள்

மூன்று இலக்கிய மரபுகளுக்கும் இடையில் சில அடிப்படை கட்டமைப்பு மற்றும் கருப்பொருள் ஒற்றுமைகள் காணப்படுகின்றன. முதலாவதாக, பேதாரா கிருஷ்ணா (கிருஷ்ணர்) தேவி சுபத்ரா (சுபத்திரை) மற்றும் சாங் பிமன்யுவைத் (அபிமன்யு) துருவத பூர்வாவிற்கு (துவாரகை) அழைத்துச் செல்லும் நிகழ்வு மூன்று மூலங்களிலும் ஒரே மாதிரியாக காணப்படுகிறது (Samikkanu Jabamoney Ishak Samuel, 2001).

இரண்டாவதாக, பாண்டவர்கள் 13 ஆண்டுகள் வனவாசமும் அஞ்ஞானவாசமும் மேற்கொண்டதாக மூன்று பதிப்புகளிலும் காணப்படுகிறது. மகாபாரதத்திலும் வில்லிபாரதத்திலும் 12 ஆண்டு வனவாசமும் ஓராண்டு அஞ்ஞனவாசமும் தெளிவாக காட்டப்படுகிறது. ஹிகாயத் பாண்டவ லிமாவில் துரியோதனனின் அரண்மனையில் அடிமை வாழ்க்கையும் மெர்ச்சுநெகரா (Mercunegara) நாட்டில் மறைந்து வாழும் வாழ்க்கையும் 13 ஆண்டுகள் நடைபெற்றதைத் திரௌபதியின் கூற்று மூலம் காணமுடிகிறது. ஹிகாயத் பாண்டவ லிமாவில் திரௌபதி, “மகாராஜா கர்ணன் பேதாரா குந்தியை (குந்தி தேவி) அஸ்தினாபுரத்திற்கு அழைத்துச் சென்றதாகவும், தான் பாண்டவர்களின் மனைவியரையும் பணிப்பெண்களையும் துரியோதனனிடமிருந்து 12 ஆண்டுகள் 12 மாதங்கள் பாதுகாத்ததாகவும் குறிப்பிடுகிறார் (Khalid Hussain (Ed.), 1992). இந்தக் கூற்று, ஹிகாயாத் பாண்டவ லிமாவிலும் பாண்டவர்கள் 13 ஆண்டுகள் அடிமை வாழ்க்கையையும் அஞ்ஞனவாசமும் மேற்கொண்டதைக் காட்டுகிறது (Samikkanu Jabamoney Ishak Samuel, 2001).

மூன்றாவதாக, உத்தரையை அர்ஜுனனுக்கு மணம் முடித்துக் கொடுக்க எடுக்கப்பட்ட முடிவு அனைத்து மூன்று பதிப்புகளிலும் காணப்படுகிறது. ஹிகாயத் பாண்டவ லிமாவில் மகாராஜா மங்கஸ்பதியும் மகாபாரதத்தில் விராட மன்னனும் வில்லிபாரதத்தில் உத்தரனும் உத்தரையை அர்ஜுனனுக்கு மணமுடித்துத் தருவதாகக் கூறுகின்றனர். மேலும், மூன்று பதிப்புகளிலும் உத்தரை அபிமன்யுவுக்கு வயதிலும் தகுதியிலும் பொருத்தமானவள் என்று அர்ஜுனன் கூறுவதைப் பார்க்கமுடிகிறது. தொடர்ந்து, மூன்று பதிப்புகளிலும் உத்தரைக்கும் அபிமன்யுவுக்கும் இடையிலான திருமணம் வெற்றிகரமாக நடைபெறுகிறது (Samikkanu Jabamoney Ishak Samuel, 2001).

நான்காவதாக, மகாராஜா தர்மவங்கசா (தருமபுத்திரர்) பேதாரா கிருஷ்ணாவுடன் கௌரவர்களுடனான போர் குறித்து ஆலோசிப்பது மூன்று பதிப்புகளிலும் காணமுடிகின்றது. ஐந்தாவதாக, ஹிகாயத் பாண்டவ லிமாவில் பேதாரா கிருஷ்ணா சாங் ராஜுனாவையும், மகாபாரதத்திலும் வில்லிபாரதத்திலும் வியாசர் அர்ஜுனனையும் சக்திவாய்ந்த ஆயுதத்தைப் பெற தவம் செய்யப் பணிக்கின்றனர். ஆறாவதாக, பாண்டவர்கள் உயிருடன் திரும்பியதை அறிந்ததும், தனது ஆட்சி நிலைக்காது என்று துரியோதனன் அஞ்சும் உணர்வு மூன்று பதிப்புகளிலும் ஒரே மாதிரியாகச் சித்தரிக்கப்படுகிறது (Samikkanu Jabamoney Ishak Samuel, 2001).

உருமாற்றங்கள்

ஹிகாயத் பாண்டவ லிமாவில் சில முக்கிய கதை நிகழ்வுகள் உருமாற்றங்கள் பெற்றுள்ளன. இவை முழுமையான புதிய சேர்ப்புகள் அல்ல, மாறாக, பழைய நிகழ்வுகளின் உருமாற்றமாகும். முதலாவதாக, மகாபாரதத்திலும் வில்லிபாரதத்திலும் அர்ஜுனன் ஆயுதம் பெறுவதற்காக ஒரு காலில் நின்று கடுந்தவம் செய்கிறான். ஆனால், ஹிகாயத் பாண்டவ லிமாவில் இதே தவக்கோலத்தைச் அபிமன்யு தேவி சித்தி சுந்தரியின் காதலைப் பெறுவதற்காக மேற்கொள்கிறான். இங்குக் தவக்கோலம் ஒன்றாக இருப்பினும், நோக்கமும் கதைப் பாத்திரமும் முற்றிலும் வேறுபட்டுக் காணப்படுகிறது (Samikkanu Jabamoney Ishak Samuel, 2001).

இரண்டாவதாக, மகாபாரதத்திலும் வில்லிபாரதத்திலும் அர்ஜுனன் மாதலி என்ற தேரோட்டியால் இந்திரலோகத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறான். ஆனால், ஹிகாயத் பாண்டவ லிமாவில் அபிமன்யு கால புத்திரனால் பேதாரா துர்க்காவிடம் (Betara Durga) அழைத்துச் செல்லப்படுகிறான். இது மலாய் இலக்கியத்தில் துர்க்கா தேவிக்கு உள்ள முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கும் வகையில் நிகழும் ஒரு கலாசார உருமாற்றமாகும் (Samikkanu Jabamoney Ishak Samuel, 2001).

மூன்றாவதாக, கடோத்கஜனின் போரின் நேரமும் காரணமும் மாற்றம் பெறுகின்றன. மகாபாரதத்திலும் வில்லிபாரதத்திலும் கடோத்கஜா அலாயுதா என்ற இராட்சசனைக் கொன்று தலையை வீசுவது பாரதப் போரின் போது நடைபெறும் ஒரு தந்திரோபாய நிகழ்வு. ஹிகாயத் பாண்டவ லிமாவில் இதே செயலைக் கடோத்கஜா சாங் ஜதந்தாவின் மீது செய்வது, சாங் பிமன்யுவின் காதல் திருமணத்தைப் பாதுகாக்கும் ஒரு முன்னெடுப்பாக அமைந்துள்ளது (Samikkanu Jabamoney Ishak Samuel, 2001).

நான்காவதாக, மகாபாரதத்திலும் வில்லிபாரதத்திலும் கிருஷ்ணர்-ருக்மணி மற்றும் அர்ஜுனன்-சுபத்திரை திருமணங்கள் ருக்குமான் அல்லது பலராமனால் எதிர்க்கப்பட்டு, போருக்குப் பின் நிறைவேறுகின்றன. ஆனால், ஹிகாயத் பாண்டவ லிமாவில் சாங் பிமன்யு-தேவி சித்தி சுந்தரி திருமணத்திற்குப் பலராமன் எதிர்ப்புத் தெரிவிக்கின்றார். மேலும் கடோத்கஜாவுக்கும் பாலராமனுக்கும் இடையே ஏற்பட்ட போருக்குப்பின் இவர்களின் திருமணம் நடைபெருகின்றது (Samikkanu Jabamoney Ishak Samuel, 2001).

சேர்ப்புகள்

ஹிகாயத் பாண்டவ லிமாவில் மகாபாரத கதையில் இல்லாத 23 புதிய நிகழ்வுகளையும், கதைமாந்தர்களையும் கற்பனை செய்து இணைத்துள்ளார். இவை ஹிகாயத் பாண்டவா லிமாவின் தனித்துவமான அடையாளமாகும். முதலாவதாக, தேவி சித்தி சுந்தரி தொடர்பான முற்றிலும் புதிய கதைக்கோவை உருவாக்கப்பட்டுள்ளது. மகாராஜா பாலதேவா தேவி சித்தி சுந்தரியை வளர்ப்பு மகளாக ஏற்று, அவளை இலட்சுமண குமாராவிற்கு நிச்சயித்தல்; தேவி சித்தி சுந்தரி தன் தோழி சி தர்பணா மூலம் இந்த விஷயத்தை சாங் பிமன்யுவிற்குத் தெரிவித்தல்; மற்றும் மகாராஜா பாலதேவா சாங் பிமன்யு தேவி சித்தி சுந்தரியைக் காதலிப்பதை அறிந்ததும் அவனைக் கொல்ல மிரட்டுதல் ஆகியவை இந்தப் புதிய கதைக்கோவையின் முக்கிய நிகழ்வுகளாகும் (Khalid Hussain (Ed.), 1992).

இரண்டாவதாக, புதிய தெய்வீக மற்றும் அதீத இயற்கை நிகழ்வுகள் சேர்க்கப்பட்டுள்ளன. பேதாரா துர்க்கா சாங் பிமன்யுவை மகாராஜா கடோத்கஜாவிடம் அனுப்பி வைத்தல், மகாராஜா கடோத்கஜா சாங் பிமன்யுவிற்குத் தேவி சித்தி சுந்தரியைப் பெற்றுத் தர உதவுதல், மகாராஜா கடோத்கஜாவும் சாங் செந்தக சுதர்சாவும் தேவி சித்தி சுந்தரி மற்றும் சி தர்பணாவின் வேடத்தில் இலட்சுமண குமாராவைக் கொல்லக் காத்திருத்தல், இராட்சசன் சாங் ஜதந்தா இலட்சுமண குமாராவின் வேடத்தில் அரண்மனைக்குள் நுழைதல் ஆகியவை புதிதாக இணைக்கப்பட்ட நிகழ்வுகளாகும் (Khalid Hussain (Ed.), 1992).

மூன்றாவதாக, புதிய போர் மற்றும் அரசியல் நிகழ்வுகளும் சேர்க்கப்பட்டுள்ளன. மகாராஜா துரியோதனன் கோபம் கொண்டு கடோத்கஜாவின் தலைநகரான தாராவதி புராவின் மீது படையெடுத்தல், மகாராஜா பாலதேவாவும் மகாராஜா கடோத்கஜாவும் நெருப்பின் வடிவத்திற்கு மாறி போரிடுதல், மற்றும் பேதாரா இந்திரா பேகவான் நாரதனை அனுப்பி இந்தப் போரைப் பற்றி பேதாரா கிருஷ்ணாவிற்குத் தெரிவித்தல் ஆகியவை குறிப்பிடத்தக்கவை (Khalid Hussain (Ed.), 1992).

நான்காவதாக, முற்றிலும் புதிய கதைமாந்தர்கள் மற்றும் நகைச்சுவைக் கூறுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. சி தர்பணா, ஜெருடே, சாங் ஜதந்தா, கால புத்திரன், வாலதாத்தா போன்ற புதிய மாந்தர்களும், மலாய் நாடக மரபில் வரும் நகைச்சுவை வேடங்களான சி செமர் மற்றும் சி செமுராஸ் மூலம் இடம்பெறும் நகைச்சுவை நிகழ்வுகளும், சாங் ராஜுனா சி செமர் மற்றும் சி செமுராஸுடன் துருவத பூர்வா மற்றும் விராட நாட்டிற்குச் செய்யும் பயணமும் இந்த வகையில் அடங்கும் (Khalid Hussain (Ed.), 1992).

ஐந்தாவதாக, உளவியல் மற்றும் உணர்வு சார்ந்த பல சேர்ப்புகள் காணப்படுகின்றன. மகாராஜா கர்ணன் இந்திர பாஸ்தாவிற்கு வந்து பாண்டவர்களின் மனைவியரையும் குழந்தைகளையும் அழைத்துச் செல்ல முயலுதல், தேவி ஸெரிகண்டி (சிகண்டி) சாங் ராஜுனாவின் மனைவியாக சித்தரிக்கப்படுதல். சாங் பிமன்யு தேவி உத்தாரியின் அழகைக் கண்டு காதல் கொண்டு மணக்காவிட்டால் காட்டிற்குச் செல்வதாக மிரட்டல், மற்றும் தேவி சித்தி சுந்தரியின் பொறாமை, இரண்டாவது திருமணத்திற்குப் பின் சித்தி சுந்தரி கோபம் கொண்டு தந்தை வீடு திரும்புதல், பின்னர் சாங் ராஜுனா கற்றுத் தந்த மந்திரத்தின் மூலம் சாங் பிமன்யு அவளைச் சமாதானப்படுத்தி, அவள் தேவி உத்தாரியுடன் நட்புடன் பழகுதல் ஆகியவை இந்தச் சேர்ப்புகளில் அடங்கும் (Khalid Hussain (Ed.), 1992).

குறைப்புகள்

ஹிகாயத் பாண்டவ லிமாவில் மகாபாரதத்தில் இடம்பெற்றுள்ள சில முக்கிய கதைக்கூறுகள் முற்றிலுமாக நீக்கப்பட்டு எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் குறைப்புகள் கதையின் போக்கை மிகவும் நேரடியாகவும்,

காதல் மற்றும் மகிழ்வூட்டல் சார்ந்ததாகவும் மாற்றியமைத்துள்ளன. முதலாவதாக, குந்தியின் வனவாசக் காட்சி நீக்கப்பட்டுள்ளது. மகாபாரதத்திலும் வில்லிபாரதத்திலும் பாண்டவர்கள் வனவாசத்திற்குப் புறப்படும்போது குந்தி அஸ்தினாபுரத்திற்கு அனுப்பப்படும் நிகழ்வு ஹிகாயத் பாண்டவ லிமாவில் இல்லை. மாறாக, பாண்டவர்கள் நாகத்தால் விழுங்கப்பட்ட பின்னரே குந்தி அஸ்தினாபுரத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறார் (Samikkanu Jabamoney Ishak Samuel, 2001).

இரண்டாவதாக, மகாபாரதத்தில் அர்ஜுனன் உத்தாரிக்கு நடனம் கற்றுத்தந்த குரு என்பதால் அவளை மணக்க மறுக்கும் நீண்ட விளக்கம் ஹிகாயத் பாண்டவ லிமாவில் காணப்படவில்லை. அதற்கு மாறாக, ஹிகாயத் பாண்டவ லிமாவில் வயது மற்றும் தகுதி ஒப்பு நிலை மட்டுமே காரணமாகக் கூறப்படுகிறது (Samikkanu Jabamoney Ishak Samuel, 2001).

மூன்றாவதாக, ஹிகாயத் பாண்டவ லிமாவில் இடப்பெயர்வு சார்ந்த நிகழ்வு குறைக்கப்பட்டுள்ளது. மகாபாரதத்திலும் வில்லிபாரதத்திலும் பாண்டவர்கள் விராட நகரைவிட்டு உபப்லவ்யா என்ற புதிய நகருக்குச் சென்று அங்குக் கோட்டையமைத்து தங்கும் சிக்கலான அரசியல் நடவடிக்கைகள் ஹிகாயத் பாண்டவ லிமாவில் இல்லை. மாறாக, ஹிகாயத் பாண்டவ லிமாவில் பாண்டவர்கள் நேரடியாக இந்திர பாஸ்தாவிற்குத் திரும்புகின்றனர் (Samikkanu Jabamoney Ishak Samuel, 2001).

அட்டவணை 1 ஹிகாயத் பாண்டவ லிமா, மகாபாரதம், வில்லிபாரதம் ஆகிய பதிப்புகளில் அபிமன்யுவின் திருமணம் ஒப்பீட்டு ஆய்வு முடிவுகள்

எண்.	நிகழ்வு	HPL	MB	VB
1	கிருஷ்ணர் சுபத்ரா மற்றும் அபிமன்யுவை துருவத பூர்வாவிற்கு அழைத்துச் செல்லுதல்	✓	✓	✓
2	பாலதேவா ஸிதி ஸுந்தரியை வளர்ப்பு மகளாக ஏற்று இலட்சுமண குமாராவிற்கு நிச்சயித்தல்	✓	✗	✗
3	ஸிதி ஸுந்தரி தர்பணா மூலம் திருமண விஷயத்தைத் தெரிவித்தல்	✓	✗	✗
4	பாலதேவா சாங் பிமன்யுவைக் கொல்ல மிரட்டல்	✓	✗	✗
5	சாங் பிமன்யு தவம் செய்தல்	✓	✗	✗
6	கால புத்திரன் சாங் பிமன்யுவை பேதாரா துர்க்காவிடம் அழைத்துச் செல்லுதல்	✓	✗	✗
7	பேதாரா துர்க்கா சாங் பிமன்யுவை கடோத்கஜாவிடம் அனுப்புதல்	✓	✗	✗
8	கடோத்கஜா உதவுதல்	✓	✗	✗
9	கடோத்கஜா மற்றும் செந்தக சுதர்சா உருவமாற்றம்	✓	✗	✗
10	ஜதந்தா உருவமாற்றம்	✓	✗	✗
11	கடோத்கஜா ஜதந்தாவைக் கொல்லுதல்	✓	✗	✗
12	துரியோதனன் தாராவதி புராவைத் தாக்குதல்	✓	✗	✗
13	பாலதேவா மற்றும் கடோத்கஜா நெருப்பு வடிவில் போரிடுதல்	✓	✗	✗
14	இந்திரா நாரதனை அனுப்புதல்	✓	✗	✗
15	கிருஷ்ணா சமாதானப்படுத்துதல்	✓	✗	✗
16	ஸிதி ஸுந்தரியுடன் திருமணம்	✓	✗	✗
17	பாண்டவர்கள் இந்திர பாஸ்தாவிற்குத் திரும்புதல்	✓	✗	✗
18	விராட மன்னர் உத்தாரியை அர்ஜுனனுக்கு மணமுடிக்க முன்வருதல்	✓	✓	✓
19	அர்ஜுனன் மறுத்து அபிமன்யுவிற்கு மணமுடிக்க ஒப்புதல்	✓	✓	✓
20	உத்தாரியுடன் திருமணம்	✓	✓	✓
21	தேவி ஸெரிகண்டி சாங் ராஜுனாவின் மனைவி	✓	✗	✗
22	சி செமர் மற்றும் சி செமுராஸ் பயணம்	✓	✗	✗
23	நகைச்சுவை நிகழ்வுகள்	✓	✗	✗

24	கர்ணன் இந்திர பாஸ்தாவிற்கு வருதல்	✓	✗	✗
25	சாங் பிமன்யு உத்தாரியின் மீது காதல்	✓	✗	✗
26	திருமணத்திற்குப் பின் ஸிதி ஸுந்தரி கோபம்	✓	✗	✗
27	மந்திரம் மூலம் ஸிதி ஸுந்தரி திரும்பி வருதல்	✓	✗	✗

விவாதம்

ஹிகாயத் பாண்டவ லிமா, மகாபாரதம், வில்லிபாரதம் ஆகிய மூன்று இலக்கிய மரபுகளிலும் அபிமன்யுவின் திருமண நிகழ்வுகளை ஒப்பீட்டு முறையில் ஆய்வு செய்தபோது, ஒரே மூலக் கதையின் பல்வேறு பண்பாட்டு மறுவடிவங்களும் இலக்கிய மறுஉருவாக்கங்களும் தெளிவாக வெளிப்படுகின்றன. இந்த ஆய்வின் முக்கியமான கண்டுபிடிப்பு, ஹிகாயத் பாண்டவ லிமா வெறும் மொழிபெயர்ப்பு அல்லது எளிய தழுவல் அல்ல; மாறாக, அது மலாய் சமூகத்தின் கலாசாரத் தேவைகள், கதைசொல்லல் மரபுகள் மற்றும் இலக்கிய ரசனைகளுக்கேற்ப மறுஉருவாக்கம் செய்யப்பட்ட தனித்துவமான இலக்கியப் படைப்பாக இயங்குகிறது என்பதாகும்.

முதலாவதாக, அபிமன்யுவின் திருமணச் சித்தரிப்பில் காணப்படும் வேறுபாடுகள், ஒவ்வொரு இலக்கிய மரபும் திருமணத்தை வெவ்வேறு கருத்தியல் நோக்கில் அணுகியிருப்பதைக் காட்டுகின்றன. மகாபாரதம் மற்றும் வில்லிபாரதத்தில் அபிமன்யு–உத்தரையின் திருமணம் அரசியல் கூட்டணி, குல உறவு மற்றும் தர்ம ஒழுங்கின் தொடர்ச்சியாகக் காட்டப்படுகிறது. ஆனால் ஹிகாயத் பாண்டவ லிமாவில் திருமணம் காதல், தனிநபர் விருப்பம், உணர்ச்சி, சோதனை மற்றும் அதிசய அனுபவங்களின் தொகுப்பாக விரிவாக்கப்படுகிறது. இதன் மூலம் திருமணத்தின் சமூக நோக்கம் மாற்றமடைந்து, தனிமனித அனுபவமும் காதல் மையமும் முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

இரண்டாவதாக, தேவி சித்தி சுந்தரியுடனான முதல் திருமணம் முழுமையாக ஹிகாயத் பாண்டவ லிமாவுக்கே உரித்தான புதிய கதைக் கட்டமைப்பை உருவாக்குகிறது. இந்தக் கதையில் தவம், உருவமாற்றம், தெய்வீக தலையீடு, போர், நகைச்சுவை மற்றும் காதல் போன்ற பல்வேறு கூறுகள் இணைக்கப்பட்டுள்ளன. இது மலாய் இலக்கியத்தில் காணப்படும் கலப்பு கதைமுறை மற்றும் பல அடுக்குச் சுவாரஸ்யக் கதைசொல்லல் உத்தியை வெளிப்படுத்துகிறது. குறிப்பாக, அபிமன்யுவின் தவம், கடோத்கஜாவின் உதவி மற்றும் உருவமாற்றக் காட்சிகள் இந்திய இதிகாச மரபிலிருந்து பெறப்பட்டாலும், அவை மலாய் உலகக் கண்ணோட்டத்திற்கு ஏற்ப மறுபரிசீலிக்கப்பட்டுள்ளன.

மூன்றாவதாக, ஹிகாயத் பாண்டவ லிமாவில் இடம்பெற்றுள்ள உருமாற்றங்கள், இலக்கிய இடமாற்றத்தின் போது கதைகள் எவ்வாறு புதிய சமூக அர்த்தங்களைப் பெறுகின்றன என்பதைக் காட்டுகின்றன. மகாபாரதத்தில் அர்ஜுனனுடன் தொடர்புடைய சில வீர மற்றும் தவ நிகழ்வுகள், ஹிகாயத் பாண்டவ லிமாவில் அபிமன்யுவிற்கு மாற்றி வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் அபிமன்யு ஒரு துணைக் கதைமாந்தராக இல்லாமல், தனித்துவமான கதாநாயகனாக உயர்த்தப்பட்டுள்ளார். இந்த மாற்றம் மலாய் இலக்கியத்தின் கதாநாயக மையமயமாக்கல் அணுகுமுறையைக் காட்டுகிறது.

நான்காவதாக, இந்த ஆய்வில் கண்டறியப்பட்ட சேர்ப்புகள் மற்றும் குறைப்புகள், தழுவல் இலக்கியத்தின் படைப்பாற்றல் இயல்பை வெளிப்படுத்துகின்றன. ஹிகாயத் பாண்டவ லிமா சில அரசியல் மற்றும் தர்ம விளக்கங்களை நீக்கி, அதன் இடத்தில் காதல், குடும்ப உறவு, உணர்ச்சி மற்றும் அதீத இயற்கை கூறுகளைச் சேர்க்கிறது. இதன் மூலம் கதை எளிமைப்படுத்தப்பட்டதோடு வாசகர்களின் உணர்ச்சி ஈடுபாட்டையும் அதிகரிக்கிறது.

இறுதியாக, இந்த ஒப்பீட்டு ஆய்வு மகாபாரதத்தின் தென்கிழக்காசியப் பரவல் வெறும் உரை பரிமாற்றமாக இல்லாமல், தொடர்ச்சியான பண்பாட்டு உரையாடல் மற்றும் இலக்கிய மறுவடிவமைப்பு செயல்முறையாக இருந்ததைக் காட்டுகிறது. ஹிகாயத் பாண்டவ லிமா, இந்திய இதிகாச மரபின் தாக்கத்தை ஏற்றுக்கொண்டபோதும், அதை மலாய் இலக்கிய அடையாளத்துடன் இணைத்துப் புதிய அர்த்தங்களையும் புதிய கதை உலகையும் உருவாக்கியுள்ளது. எனவே, இந்தப் படைப்பு தென்கிழக்காசிய ஒப்பீட்டு இலக்கிய ஆய்வுகளில் முக்கியமான தழுவல் இலக்கியச் சான்றாகக் கருதப்படுகிறது.

முடிவுரை

ஹிகாயத் பாண்டவ லிமா, மகாபாரதம், வில்லிபாரதம் ஆகிய மூன்று இலக்கிய மரபுகளிலும் அபிமன்யுவின் திருமண நிகழ்வுகளை ஒப்பீட்டு முறையில் ஆராய்ந்த இவ்வாய்வு, ஒரே இதிகாசக் கதையின் பரவல் மற்றும் மாற்றம் வெறும் மொழிபெயர்ப்பு செயல்முறை அல்ல; அது பண்பாட்டு மறுஉருவாக்கம் மற்றும் இலக்கியப் புதுமையின் தொடர்ச்சியான செயல்முறை என்பதை வெளிப்படுத்துகிறது. ஆய்வின் முடிவுகள், மகாபாரதமும் வில்லிபாரதமும் அபிமன்யுவின் உத்தரையுடனான திருமணத்தை அடிப்படையாக ஒரே கருத்தியல் அமைப்பில் சித்தரித்தாலும், ஹிகாயத் பாண்டவ லிமா அந்த நிகழ்வை விரிவுபடுத்தி புதிய கதை உலகை உருவாக்கியிருப்பதை காட்டுகின்றன. குறிப்பாக, தேவி சித்தி சுந்தரியுடனான முதல் திருமணம், புதிய கதைமாந்தர்கள், காதல் மையமிக்க நிகழ்வுகள், உருவமாற்றம், தெய்வீக தலையீடு, நகைச்சுவை மற்றும் மந்திரக் கூறுகள் ஆகியவற்றின் இணைப்பின் மூலம் ஹிகாயத் பாண்டவ லிமாவை ஒரு தனித்துவமான இலக்கியப் படைப்பாக நிலைநிறுத்துகிறது.

மேலும், 27 ஒப்பீட்டு நிகழ்வுகளில் கணிசமான பகுதி ஹிகாயத் பாண்டவ லிமாவுக்கே உரித்தானதாக இருப்பது, மலாய் இலக்கியப் படைப்பாளர் மூல இதிகாசக் கூறுகளை பாதுகாத்தபடியே அவற்றை உள்ளூர் பண்பாட்டு சூழல், வாசகர் எதிர்பார்ப்பு மற்றும் கதைசொல்லல் மரபுகளுக்கேற்ப மறுவடிவமைத்துள்ளதை உறுதிப்படுத்துகிறது. இதன் மூலம் தழுவல் இலக்கியம் என்பது சார்பற்ற மீளுருவாக்கம் அல்ல; மாறாக, புதிய சமூக மற்றும் பண்பாட்டு அர்த்தங்களை உருவாக்கும் படைப்பாற்றல் செயலாகும் என்பது தெளிவாகிறது. இவ்வாய்வு தெற்கு மற்றும் தென்கிழக்காசிய இலக்கிய உறவுகளைப் புரிந்துகொள்ளவும், மகாபாரதத்தின் பன்முகப் பரவலை விளக்கவும், ஒப்பீட்டு இலக்கிய ஆய்வுகளில் மலாய்–தமிழ்–சமஸ்கிருத இலக்கியங்களுக்கிடையேயான தொடர்புகளை மேலும் விரிவுபடுத்தவும் முக்கிய பங்களிப்பை வழங்குகிறது. எதிர்கால ஆய்வுகள், ஹிகாயத் பாண்டவ லிமாவில் இடம்பெறும் பிற கதைமாந்தர்கள் மற்றும் நிகழ்வுகளையும் இதேபோன்ற ஒப்பீட்டு அணுகுமுறையில் ஆய்வு செய்வதன் மூலம், மகாபாரதத் தழுவல்களின் பரந்த பண்பாட்டு இயக்கங்களை மேலும் ஆழமாகப் புரிந்துகொள்ள வழிவகுக்கும்.

References

Brakel, L. F. (1980). The Indian epics in Malay. Archipel, 20, 143–160.

Ismail Hamid. (1987). Perkembangan kesusasteraan Melayu lama. Longman Malaysia.

Jesudasan, C., & Jesudasan, H. (1961). A history of Tamil literature. Y.M.C.A. Publishing House.

Khalid Hussain (Ed.). (1992). Hikayat Pandawa Lima. Dewan Bahasa dan Pustaka.

Kumar, S. K. (2025). Influences of Indian Culture on South-East Asia. https://doi.org/10.6084/m9.figshare.30062911

Palaniappan. (1980). Pengubahsuaian unsur-unsur mitos India di dalam kesusasteraan Melayu tradisional dengan merujuk khas kepada Sejarah Melayu dan Hikayat Hang Tuah [Unpublished master's thesis]. University of Malaya.

Ramachandran, P., & Sharma, R. (2013). Are You a Kaurava or a Pandava at Work?: Management Lessons from the Mahabharata. The IUP Journal of Soft Skills, 7(2), 55.

Ming, D. C. (2018). The Reworking of Indian Epics in the Hands of Javanese and Malay Authors. 209–224. https://doi.org/10.1007/978-981-10-7317-5_12

Rath, Prof. S., & Mishra, Dr. A. (2022). Management Lessons from the Epics of Hindu Mythology: A Case on the Mahabharat. International Journal of Research Publication and Reviews, 1659–1661.

Samikkanu Jabamoney Ishak Samuel. (2001). Hikayat Pandawa Lima: A comparison of the Malay, Sanskrit and Tamil versions [Unpublished master's thesis]. University of Malaya.

Samikkanu Jabamoney Ishak Samuel. (2008). The influence of the Ramayana and Mahabharata in traditional Tamil poetry and modern poems in Malaysia [Doctoral dissertation, University of Malaya].

Samikkanu Jabamoney Ishak Samuel. (2019). Mahabharata in Malay language. Journal of Tamil Peraivu.

Schreiner, P. (2017). Karman-Theory in the Mahābhārata Prolegomena to an Inquiry into the Culture and the Condition of Philosophical Reflection About Human Life and the Requirements of Liberation. Journal of Indian Philosophy, 45(4), 651–667. https://doi.org/10.1007/S10781-016-9295-X

Singaravelu, S. (1990). The impact of the Mahabharata tradition in the Malay literary tradition. In R. N. Dandekar (Ed.), The Mahabharata revisited (pp. 227–243). Sahitya Akademi.

Suastika, I. M., Jirnaya, I. K., Sukersa, I. W., & Puspawati, L. P. (2017). The Process Of Transforming

The Mahabharata Literary Work Written in the Old Javanese into Geguritan Sarpayajnya and Geguritan Kicaka Written in the Balinese Language. 1(2), 103–114. https://doi.org/10.25078/IJHSRS.V1I2.314
Sukthankar, V. S. (Ed.). (1933). The Mahabharata: For the first time critically edited. Bhandarkar Oriental Research Institute.
Sukthankar, V. S. (1959). On the meaning of the Mahabharata. The Asiatic Society of Bombay.
Vaidya, C. V. (1966). The Mahabharata: A criticism. Mehat Chand Lachman Dass.
Valliammal, S. (1989). Villibharatatil Kannan. Vanipathipagam.
Varatarasan, M. (1972). Tamil ilakkiya varalaru. Sahitya Akademi.
Villiputturar. (1990). Villiparatam (Vols. 1–4, A. Manikkam, Ed.). Vartamanan.
Vyasar Aruliya Mahabharata. (1989). Vyasar Aruliya Mahābhārata (Vols. 1–4, A. L. Nadarajan, Trans.). Bharaty Pathipagam.
Yardi, M. R. (1986). The Mahabharata, its genesis and growth: A statistical study. Bhandarkar Oriental Research Institute.
Yasa, I. W. P. S. (2023). Nilai Pendidikan Karakter dalam Kekawin Bharatayuddha (Raja Salya Pralaya). Dharma Sastra, 3(1), 95–101. https://doi.org/10.25078/ds.v3i1.2217